பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 06 2025 MONDAY 12.40 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

- கிராமங்கள் மற்றும் தொலைதூரப்பகுதிகளில் விலங்குகள் மற்றும் கால்நடைகளுக்கான மருத்துவ வசதி தடையின்றி கிடைக்கப்பெற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

- சர்வதேச நாடாளுமன்ற தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் மக்கள் பிரதிநிதிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- அரசு திட்டங்களின் பயன்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- இந்தியா - இலங்கை இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை பெருக்கும் நோக்கில், 15 உறுப்பினர் கொண்ட இந்திய தொழில் கூட்டமைப்புக்குழுவினர் இலங்கை சென்றுள்ளனர்.

- அமர்நாத் யாத்திரை வரும் வியாழக்கிழமை தொடங்க உள்ள நிலையில், இதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

விலங்குகளின் உயிர்காக்கும் பணியில் ஈடுபடும் கால்நடை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் சேவை போற்றத்தக்கது என்று குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் பரேலியில், இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், கால்நடை பராமரிப்புப்பணியில் ஈடுபடும் அனைவரும் முறையான பயிற்சியை மேற்கொண்டு சேவையாற்ற வேண்டும் என்று கூறினார்.

கிராமப்புறங்களில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ சேவை கிடைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கால்நடைகளின் ஆரோக்கியத்தை காப்பதற்கான சிறப்பு முகாம்களுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கிராமப்புறங்களில் அதிக அளவில் நடத்தப்படும் இந்த முகாம்கள் மூலம், கால்நடை மற்றும் விலங்குகளுக்கு தேவையான மருத்துவ வசதி தடையின்றி கிடைக்கும் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

நாளை கோரக்பூர் செல்லும் குடியரசுத் தலைவர், மஹாயோகி குரு கோரக்நாத் ஆயுஷ் பல்கலைக்கழகம், கலையரங்கம், வகுப்பறைக் கட்டிடங்களை திறந்து வைப்பதுடன், புதிய மகளிர் விடுதி கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.

<<<<<>>>>>

சர்வதேச நாடாளுமன்ற தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் தமது உளமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலகெங்கிலும் உள்ள நாடாளுமன்ற மாநில மற்றும் மாகாணங்களின் பிரதிநிதிகள் மக்களின் எதிர்பார்ப்புகளையும், குரலையும் அரசுக்கு எடுத்துரைக்கும் பணியில் சிறப்பாக செயலாற்றி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளை பாதுகாக்கும் பணியில் இவர்கள் சிறப்பான சேவை புரிந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவை பொறுத்தவரை நாடாளுமன்றம் மிகவும் உயர்ந்த சட்டப்பூர்வ அமைப்பாகவும், ஜனநாயகத்தின் சின்னமாகவும் விளங்குகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் மாண்புகளை பாதுகாப்பதிலும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்தியாவின் உணர்வை வெளிப்படுத்தும் அமைப்பாகவும் உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் வளமிக்க அரசியல் சாசன பராம்பரியத்தையும் இந்தியா நாடாளுமன்றம் வலுப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புடனும் செயல்படுவதில் இந்தியா நாடாளுமன்றத்திற்கு ஈடு இணை ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நலனையும், சட்டத்தையும், ஜனநாயகத்தையும், மக்களையும் காக்கும் அமைப்பாக நாடாளுமன்றத்தை செயல்பட வைக்க அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் உறுதியேற்போம் என்றும் திரு ஓம். பிர்லா தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

சர்வதேச நாடாளுமன்ற தினத்தையொட்டி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு விடுத்துள்ள செய்தியில், நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் ஒவ்வொரு கேள்வியும் அதற்கான பதிலும், நிறைவேற்றப்படும் சட்டங்களும் மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

நாடாளுமன்ற ஜனநாயக கட்டமைப்பில் ஓர் அங்கமாகவும் திகழ்வது குறித்து ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் பெருமை கொள்ள வேண்டும் என்றும் திரு கிரண் ரிஜிஜு தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா - இலங்கை இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை பெருக்கும் நோக்கில், 15 உறுப்பினர் கொண்ட இந்திய தொழில் கூட்டமைப்புக்குழுவினர் இலங்கை தலைநகர் கொழும்பு சென்றுள்ளனர்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு சஞ்ஜீவ் பூரி தலைமையிலான குழுவினர், வரும் புதன்கிழமை வரை இலங்கையில் தொழில்துறை அமைப்புகளுடன் வர்த்தகம் மற்றும் முதலீடுகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இலங்கை அதிபர் திரு அனுரகுமார திசநாயக்கே, மாநில அமைச்சர்கள், முதலீட்டு வாரியம் மற்றும் தொழில் அதிபர்களுடனும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம், தொழில்துறை கூட்டு முயற்சிகள் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்படவுள்ளன.

<<<<<>>>>>

சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் பங்குபெற்ற பழங்குடியின மக்களின் தியாகத்தை போற்றும் Hul Diwas இன்று கொண்டாடப்படுகிறது.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்தும், அவர்களுக்கு துணை நின்ற ஜமீன்தார்களுக்கு எதிராகவும் ஜார்கண்ட், மேற்குவங்கம், ஒடிஷா, அஸ்ஸாம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள சந்தால் பழங்குடியின மக்கள் சார்பில் விடுதலை போராட்ட இயக்கம் தொடங்கப்பட்டது.

Sidhu முர்மு, Kanhu முர்மு சகோதரர்கள் ஆயிரக்கணக்கான பழங்குடியினத்தை சேர்ந்த ஆண், பெண் இருபாலரையும் இணைத்து இந்த இயக்கத்தை மேற்கொண்டனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், சந்தால் விடுதலை இயக்கப்போராளிகள் சிதோ கான்ஹூ, சாந்த் பைரவ், பூலோ ஜானு ஆகியோர் எந்தவொரு அடக்குமுறைக்கும் அஞ்சாமல் வீரத்துடன் போராடியதை நினைவுகூர்ந்துள்ளார்.

அவர்கள் மக்களுக்காகவும், விடுதலைக்காகவும் நீதியை நிலைநாட்டவும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் என்றும் மறக்க முடியாதவை என்று கூறியுள்ளார்.

அவர்களின் வாழ்க்கை நாட்டு மக்களிடையே தேசப்பற்றையும், தியாகத்தையும், அர்ப்பணிப்பு உணர்வையும் அளித்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, நலத்திட்டங்களின் பயன்கள் அனைத்துத்தரப்பினருக்கும் சென்றடைய வேண்டும் என்ற தொலைநோக்கோடு செயல்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று பாதுகாப்புத்துறை பணியாளர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர், அரசின் திட்டப்பயன்கள் வீடுகளுக்கே சென்று மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற முனைப்போடு அரசு செயலாற்றி வருவதாகவும் கூறினார்.

*'Sound Byte - எல். முருகன் - 60 Sec.*

<<<<<>>>>>

அமர்நாத் யாத்திரை வரும் வியாழக்கிழமை தொடங்க உள்ள நிலையில், இதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

இன்று காலை முதல் ஏராளமான யாத்ரீகர்கள் சரஸ்வதி கோவில் வளாகத்தில் தங்களது அமர்நாத் யாத்திரைக்கான பயணச்சீட்டுகளை பெற்று வருகின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளும் விரிவாக செய்யப்பட்டுள்ள நிலையில், எவ்வித தயக்கமும் இன்றி தங்களது ஆன்மிக திருப்பணியை நிறைவேற்றுவதற்காக பக்தர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் சரஸ்வதி கோவில் வளாகத்திற்கு வந்துகொண்டுள்ளனர்.

மகாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம், உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து வந்துள்ள யாத்ரீகர்கள் அமர்நாத் குகை கோவிலுக்கு சென்று பனி லிங்கத்தை தரிசிக்கும் நாளை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாக தெரிவித்தனர்.

<<<<<>>>>>

ரயில் பயணத்திற்கான முன்பதிவு பட்டியலை ரயில் புறப்படுவதற்கு 8 மணி நேரம் முன்பாக வெளியிட படிப்படியாக நடவடிக்கை எடுக்குமாறு அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் ரயில்வே வாரியத்தை அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் ரயிலுக்கான பயணியர் பட்டியல் முந்தைய தினம் இரவு 9 மணிக்கு இறுதி செய்யப்படும் என்று ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காத்திருப்பு பட்டியலில் உள்ள பயணிகள் மாற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

19 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

நார்த்ஹாம்டனில் பிற்பகல் மணி 3.30க்கு இப்போட்டி தொடங்குகிறது.

-------------

பல்கேரியா ஜூனியர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Naishaa Kaur வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<<END>>>>>